# 20-11-2023 செய்தி

## கழிவறைகளின் நிலை

- இந்தியாவுக்கு சுதந்திரத்தைவிடச் சுகாதாரம் தான் முக்கியம் என மகாத்மா காந்தி கூறியுள்ளார்.

**தரவுகள்**

- கிராமங்களில் நான்கில் ஒரு பங்குக்கும் அதிகமானோருக்குக் கழிப்பறை வசதி இல்லை என தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.
- கிராமப்புறக் குடும்பங்களில் 28.7% வீடுகளுக்குக் கழிப்பறை வசதி இல்லை என்கிறது குடிநீர், சுகாதாரம் – வீட்டுவசதி அமைச்சகம்.
- ஜார்க்கண்டில் 42% கிராமப்புறக் குடும்பங்களுக்குக் கழிப்பறை வசதி இல்லை. இது தமிழ்நாட்டில் 37%, ராஜஸ்தானில் 34% என உள்ளது. 96.2% நகர்ப்புறக் குடும்பங்கள் கழிப்பறைகளைப் பயன்படுத்துகின்றன என்று தேசியப் புள்ளியியல் அலுவலகம் தெரிவித்திருக்கிறது.

**பள்ளிகளில்**

- இந்தியாவில் 15,000 க்கும் மேற்பட்ட பள்ளிகளில கழிப்பறை வசதி இல்லை எனக் கூறியிருக்கிறார் மத்தியக் கல்வி அமைச்சல் ரமேஷ் போக்ரியால்.
- தமிழ்நாட்டில் கழிப்பறை வசதி இல்லாத 2,391 அரசுப் பள்ளிகளின் பட்டியலை 2020 ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித் துறையிடம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் ஒப்படைத்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.
- ஃபோர்ப்ஸ் இந்தியா வெளியிட்ட செய்தியில், 2020இல் நடத்தப்பட்ட ஆய்வில், 40% அரசுப் பள்ளிகள் போதிய கழிப்பறைகள் இல்லாதவை அல்லது பயன்படுத்த முடியாதவை எனக் கண்டறியப்பட்டது.

**பொருளாதார இழப்பு**

- போதிய கழிப்பறை வசதிகள், சுகாதார வசதிகள் இல்லாததால், ஒவ்வோர் ஆண்டும், ரூ.2.4 லட்சம் கோடியை இந்தியப் பொருளாதாரம் இழந்து வருகிறது என்று உலக வங்கியின் அங்கமான, நீர் சுகாதாரத்துக்கான இயக்கம் தெரிவித்துள்ளது.
- இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.4% ஆகும். அகால மரணங்கள், சிகிச்சை செலவு, நோய் காரணமாக வேலை நேர இழப்பு, வருமானம் இழப்பு போன்றவற்றால் இந்த இழப்புகள் நேர்கின்றன.
- அதாவது, சுகாதாரம் இல்லாததால் ஒவ்வோர் ஆண்டும் ரூ.1,200 கோடி அளவுக்குச் சுற்றுலாத் துறையில் வருவாய் இழப்பு ஏற்படுகிறது.
- நீர்நிலைகளின் அருகே மலம் கழிக்கப்படுவதால், குடிநீர் சுத்திகரிப்பதற்கு ஆண்டுதோறும், ரூ.11,200 கோடி செலவாகிறது.
- சுகாதாரமற்ற குடிநீர், கழிப்பிடங்களால் ஏற்படும் உடல்நலக் குறைவால் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. இதனால், ஒவ்வோர் ஆண்டும் ரூ.21,700 கோடி அளவுக்குப் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

## ஜோஹா அரிசி ரகம்

- அஸ்ஸாம் மாநிலத்துக்குச் சொந்தமான ஜோஹா அரிசி, வடகிழக்கு மாநிலங்களில் பரவலாகப் பயிரிடப்படுகிறது.
- இந்த அரிசி ரகம் சர்க்கரை நோயாளிகளுக்கு உகந்ததாக இருப்பினும், குறைந்த மகசூலைத் தருவதால் விவசாயிகளிடம் போதிய வரவேற்பைப் பெறவில்லை.
- அதிக மகசூல் தரும் உயர்தர ஜோஹா அரிசி ரகத்தை மேம்படுத்தும் பணியில் அஸ்ஸாம் அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தில் வேளாண் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.
- ஜிங்க் இரும்பு உள்ளிட்ட ஊட்டச்சத்துகளால் செறிவூட்டப்பட்ட அரிசி ரகங்களை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- அதிக ஊட்டச்சத்துகளைக் கொண்ட ஊதா நிற லாவண்யா அரிசி ரகத்தை இந்நிறுவனம் கடந்த ஆண்டு உருவாக்கியது.
- இந்நிறுவனம் உருவாக்கிய ரஞ்சித் பகதூர் ஆகிய அரிசி ரகங்கள் அஸ்ஸாம் மட்டுமல்லாமல் பீகார், ஒடிசா, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களிலும் நேபாளம், வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளிலும் பயிரிடப்படுகின்றன.

## எல்-நினோவும் சர்க்கரையும்

- எல்-நினோ தாக்கத்தால் ஏற்பட்ட பருவநிலை மாற்றம் காரணமாக ஆசியாவில் கரும்பு சாகுபடி பாதிக்கப்பட்டதால் உலக அளவில் சர்க்கரை விலையேற்றம் கண்டுள்ளது.
- இந்தியாவின் கடந்த நூற்றாண்டு கால பருவநிலை வரலாற்றில் வறண்ட வானிலை கடந்த ஆகஸ்டு மாதத்தில் பதிவாகியுள்ளது.
- நாட்டின் முக்கிய உற்பத்தி மையமான மகாராஷ்டிரத்தில் கரும்பு சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் சர்க்கரை உற்பத்தி 8 சதவீதம் குறைய வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நடப்பு 2023 - 24 வேளாண் ஆண்டில் உலகளாவிய சர்க்கரை உற்பத்தி 2 சதவீதம் குறையும் என்று ஐ.நா உணவு மற்றும் வேளாண் அமைப்பு கணித்துள்ளது.
- முந்தைய ஆண்டைவிட உற்பத்தியில் சுமார் 35 லட்சம் மெட்ரிக் டன் இழப்பு ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- உலகின் மிகப்பெரிய சர்க்கரை ஏற்றுமதி நாடான பிரேஸிலின் கரும்பு அறுவடை கடந்த ஆண்டைவிட 20 சதவீதம் அதிகரிக்கும். ஆனால் அதன் உற்பத்தி 2024 ஆம் ஆண்டில் பிற்பகுதியில் தான் விநியோக இடைவெளியை அடைக்க உதவும். அதுவரை, இறக்குமதியை நம்பியிருக்கும் ஆப்பிரிக்காவின் பெரும்பாலான நாடுகள் பாதிக்கப்படக் கூடும்.

SURESH